
செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

நா சஞ்சீவி





NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-5-7

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/125.%20%E0%AE%A8.%E0%AE%9A%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%80%E0%AE%B5%E0%AE%BF_1927

செந்தமிழ்சிற்பிகள்

ந.சஞ்சீவி (1927-1988)



அறிமுகம்

பேராசிரியர் முனைவர் ந. சஞ்சீவி, 2.5.1927ஆம் நாள் திருச்சியில் உள்ள தூய வளனார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய மு. நடேசனார், கண்ணம்மாள் இணையரின் மகனாகப் பிறந்தார்.

கல்வி

தொடக்கக் கல்வியையும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் திருச்சியில் உள்ள பள்ளிகளிலேயே படித்து முடித்தார். பின்னர் திருச்சி தூய வளனார் கல்லூரியில் 1941-43ஆம் கல்வியாண்டுகளில் பயின்று இடைக்கலைப் (Intermediate) பட்டம் பெற்றார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1943-45 ஆம் கல்வியாண்டுகளில் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், முனைவர்

மு. வரதராசன் (மு.வ) ஆகிய பேராசிரியர்களிடம் பயின்று சிறப்புத் தமிழில் இளங்கலைப் (Bachelor of Arts) பட்டமும்

1947-50 ஆம் கல்வியாண்டுகளில் பயின்று கீழ்த்திசை மொழிகளில் சிறப்பு இளங்கலைப் பட்டமும் (Bachelor of Oriental Language - Honours) பெற்றார்.

பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1963ஆம் ஆண்டில் பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளையின் வழிகாட்டுதலில் புறநானூற்று ஆராய்ச்சி என்னும் பொருளில் ஆய்வு செய்து இலக்கிய முதுவர் (Master of Literature) பட்டமும் பேராசிரியர் மு.வ.வின் வழிகாட்டுதலில் சங்க நூல்களில் அடைவளம் என்னும் பொருளில் ஆய்வுசெய்து 1969ஆம் ஆண்டில் முனைவர் (Doctor of Philosophy) பட்டமும் பெற்றார்.[4]

இவைதவிர மானுடவியல், அரசியல், ஆட்சியியல் ஆகியவற்றில் நிறைசான்றிதழ்களும் (Diplomas) மொழியியல், இயற்கை வைத்தியம், செர்மன், பிரஞ்சு, உளவியல் ஆகியவற்றில் சான்றிதழ்களும் (Certificates) பெற்றார்.

பணி

1950 – 60 ஆம் ஆண்டுகளில் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர்.

1960 – 65 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ்விரிவுரையாளர்.

1965 -71 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இணைப் பேராசிரியர்.

1971- 76 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர்.

1976–80 ஆம் ஆண்டுகளில், இந்திராகாந்தியால் நடைமுறைப்படுத்தப்பட்ட நெருக்கடிநிலை எதிர்த்ததால், பணி இடைநீக்கம்.

1980 – 87 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறைத் தலைவர்.

எழுதிய நூல்கள்

முதற்பதிப்பு ஆண்டு நூல் குறிப்பு

1954 மானங்காத்த மருதுபாண்டியர்
1954 சங்ககாலச் சான்றோர்கள்
1956 மருதிருவர்
1956 சிலப்பதிகார விருந்து
1956 வேலூர்ப் புரட்சி

கவிஞர் தரும் காட்சி இந்நூல் அச்சில் இருப்பதாக 1956ஆம் ஆண்டில் வெளிவந்த வேலூர் புரட்சி நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

1958 வீரத்தலைவர் பூலித்தேவர்
1958 இருபெருந் தலைவர்கள்
1959 சிலம்புத்தேன்
1959 உணர்வின் எல்லை
1959 செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்

இயலிசை நாடகம் இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

தமிழ் நாடக வரலாறு இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

நாடகப் பேராசிரியர் நால்வர் இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

சிவகங்கைச் சிங்கங்கள் இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

முதலில் முழங்கிய முரசு இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

வீரத் தமிழகத்தில் விடுதலை வேள்வி இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

வெள்ளையர் கண்ட வீரத் தமிழகம் இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

விடுதலை இயக்க வரலாறு இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

வெள்ளை ஆதிக்க வரலாரறு இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

போரும் வேரும் இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

1960 கும்மந்தன் கான் சாகிபு

பதிற்றுப்பத்துள் மூன்றாம் பத்து இந்நூலின் பெயர் 1960ஆம் ஆண்டில் வெளிவந்த கும்மந்தன் கான் சாகிபு நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

1970 ஆராய்ச்சிக் கட்டுரைகள்
1973 சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்
1974 இலக்கிய இயல் அ, ஆ.
1977 மங்கல மனைமாட்சி

கம்பன் – ஒரு கொம்பன் இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.

கம்பன் நம்மவன் இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.

வீடணன் – ஒரு திறனாய்வு இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.

ஆய்வியல் அரிச்சுவடி இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.

படிப்படியே தமிழ்ப் பண்பாடு இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.

கருத்துமலர்கள் இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.

1989 சீனம் தரும் சிந்தனைகள்
1989 இலக்கியத் தலைவர் கலைஞர்
1995 தமிழியல் கட்டுரைகள்
ந.சஞ்சீவியின் கட்டுரைக் களஞ்சியம்
பொதுமைசூடி

பதிப்பித்த நூல்கள்

முதற்பதிப்பு ஆண்டு நூல்

1973 First All India Tirukkural Research Seminar Papers
1974 பல்கலைப் பழந்தமிழ்
1975 தெய்வத்தமிழ்
1979 பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்

மொழிபெயர்ப்பு

சேலம் பிசப்பு டாக்டர் கால்டுவெல் 1881ஆம் ஆண்டில் எழுதிய History of Tinnaveli என்னும் ஆங்கில நூலை ”தென்பாண்டித்

திருநாடு அல்லது திருநெல்வேலி வரலாறு" என்னும் நூலை தம் மனைவியார் பேராசிரியர் கிருஷ்ணா சஞ்சீவியோடு இணைந்து 1977ஆம் ஆண்டில் மொழிபெயர்த்தார்.

பெற்ற சிறப்புகள்

- செந்தமிழ் இலக்கியச் செம்மல், தருமபுர ஆதினம், 1970
- நூலறிபுலவர், குன்றக்குடி ஆதினம், 1973
- சிந்தனைச் செம்மல்

அரசியல் ஈடுபாடு

1942ஆம் ஆண்டில் திருச்சி தூய வளனார் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பொழுது நடைபெற்ற இந்தியாவைவிட்டு வெளியேறுக! (வெள்ளையனே வெளியேறு) இயக்கத்தில் பங்கேற்றார். இந்திய விடுதலைக்குப் பின்னர் இந்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட மக்களாட்சி சமுதாய உடைமை தமிழகக் குடியரசு (Democratic Socialistic Republic of Tamilnadu) என்னும் நோக்கில் ம.பொ.சிவஞானம் நடத்திய தமிழரசுக் கழகத்தில் உறுப்பினராக அதனுடைய தொடக்க நாள் முதல் தன்னுடைய இறுதிநாள் வரை இருந்தார்.

மறைவு

22.8.1988ஆம் ஆண்டு சென்னையில் மரணமடைந்தார்.

(😊)(😊) @@@@@ (😊)(😊)

டாக்டர் ந.சஞ்சீவி
அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்
https://www.tamilvu.org/ta/library-nationalized-html-naauthor-20-235675


01.
1806
02.
ஆராய்ச்சிக் கட்டுரைகள்

20.
[வேலூர்ப்புரட்சி]

இலக்கிய வாழ்க்கை

ந. சஞ்சீவியின் 'பாரதியும் பாரதியும்' என்ற தலைப்பிலான முதல் கட்டுரை அவர் மாணவராக இருந்தபோது திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியின் ஆண்டு மலரில், 1942-ல் வெளியானது. தொடர்ந்து கல்லூரி மலர்களிலும், நினைவு மலர்களிலும், தமிழ்ச் சங்க ஆண்டு மலர்களிலும் எழுதினார். சுதேசமித்திரன், அமுதசுரபி, தமிழ் முரசு, கலைமகள், கலைக்கதிர், கல்கி, ஆனந்த விகடன், தினமணி கதிர், உமா, சீரணி, தமிழ் அரசு, காஞ்சி, தென்னகம் போன்ற இதழ்களில் தமிழாய்வு, வரலாறு, இலக்கியம் தொடர்பான பல கட்டுரைகளை எழுதினார்.

ந.சஞ்சீவி மு.வரதராசன் போன்றவர்களின் ஆய்வுமுறைமையையும் நோக்கையும் கொண்டவர். தமிழின் தனித்தன்மையை நிலைநாட்டும் நோக்கு கொண்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதினார். பொதுவாக எளிய பாடநூல்தன்மை கொண்ட நூல்கள். ஆய்வுநூல்களில் விரிவான தரவுத்தொகுப்புகளை அளித்துள்ளார். ந. சஞ்சீவி, 350-க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதினார். ஆங்கிலத்திலும் பல கட்டுரைகளை எழுதினார். உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடந்த பல இலக்கிய நிகழ்வுகளில், கருத்தரங்குகளில், மாநாடுகளில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். .



ஊற்று - பெங்களூர் தமிழ்ச் சங்க இதழ்


பொறுப்புகள்

- தலைவர், இந்திய மற்றும் அயல் மொழிகளின் புலம், சென்னைப் பல்கலைக்கழகம்.
- உறுப்பினர், பல்கலைக்கழகக் கல்விக்குழு, பேரவை, சென்னைப் பல்கலைக் கழகம்.
- உறுப்பினர், முதுகலைப் பாடத் திட்டக்குழு, சென்னைப் பல்கலைக் கழகம்.
- உறுப்பினர், தமிழ்க்குழு, ஒஸ்மானியா, பெங்களூர் பல்கலைக்கழகங்கள்.
- தலைமைப் பதிப்பாசிரியர், உயராய்வு மையம், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.
- உறுப்பினர், தமிழ்பாடத்திட்டக்குழு, திருவேங்கடவன், கள்ளிக்கோட்டை, கேரளப் பல்கலைக் கழகங்கள்.
- உறுப்பினர், தேர்வுக்குழு, இந்திய உயராய்வு மையம், சிம்லா
- உறுப்பினர், மரபு வழிப் பண்பாட்டு மையச் செயலாட்சிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகம்.
- தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம் (1969).
- தலைவர், தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (1971-72).

- தலைவர், தமிழ்க் கலை மன்றம் (1971-72).
- உறுப்பினர், செயலர், தமிழகப் புலவர் குழு (1971-76).
- துணைத்தலைவர், இந்திய அகராதி சார் கழகம், திருவனந்தபுரம், (1976).
- வாழ்நாள் உறுப்பினர், திராவிட மொழியியல் கழகம், திருவனந்தபுரம்.
- வாழ்நாள் உறுப்பினர், சித்தாந்த மகா சமாஜம்.

விருதுகள்

- பி.ஓ.எல். தேர்வில் முதன்மை நிலை பெற்றதற்காக தங்கப் பதக்கம், பரிசு, சான்றிதழ்.
- தருமபுர ஆதினம் வழங்கிய 'செந்தமிழ் இலக்கியச் செம்மல்; பட்டம்
- குன்றக்குடி ஆதினம் வழங்கிய 'நூலறி புலவர்' பட்டம்
- 'சிந்தனைச் செம்மல்' பட்டம்



https://arignargal.blogspot.com/search/label/%E0%AE%A8.%20%E0%AE%9A%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%80%E0%AE%B5%E0%AE%BF

4. பிசிராந்தையார்

ஒரு நாட்டிற்கு வாழ்வளிக்கும் **தலை சிறந்த செல்வம்** அந்நாட்டின் மண்ணும் மலையும் அல்ல; ஆறும் அடவியும் அல்ல. அந்நாட்டின் அழியாப் பெருஞ் செல்வம் அமிழ்தொழுகும் கனிவாய்க் **குழந்தைகளே** ஆம். வருங்கால உலகைப் படைக்கும் தெய்வங்களல்லரோ அச் செல்வச் சிறார்கள்? இவ்வுண்மையை நாடாளும் தலைவனாகிய பாண்டிய மன்னன் உணர்ந்திருந்தான்; தான் உணர்ந்ததோடன்றித் தான் உணர்ந்த அவ்வுணர்வைத் தமிழிலக்கியம் உள்ள வரை அதைக் கற்பார் உணர்ந்து பயன் பெறுமாறு சொல்லோவியமாகவும் ஆக்கித் தந்துள்ளான் என்றால், அவன் மாட்சியினை என்னென்று போற்றுவது!

கரவற்ற குழந்தைகள் வழங்கும் பேரின்பத்தில் மூழ்கித் திளைக்கும் பண்பு பெற்று விளங்கிய பாண்டியன் கோல் கோடா ஆட்சி புரிவதிலும் கருத்துடையவனாய் விளங்கினான், அவனுக்கு அரசியல் நெறியினை நன்கு அறிவுறுத்தக் கருதிய புலவர் பெருமானார் அவனிடம் சென்றார்; தம் உள்ளக் கருத்தை எடுத்துரைக்க முனைந்தார்; சிறந்ததோர் எடுத்துக்காட்டு வாயிலாகத் தம் எண்ணத்தை விளக்கலாயினார்: ‘களிறு ஒன்று தனியே நெல் வயலில் புகுந்து உண்ணத் தொடங்கின், நூறு காணியாயினும், அழியும்; களிற்றின் வாயில் புகும் உணவினும் காலில் மிதியுண்டு பல மடங்கு உணவுப்பொருள் அழியும். ஆயின், செய்களில் உள்ள செந்நெற்கதிர்களை முற்றவிட்டுக் காய்த்த நெல்லை அறுத்து அரிசியாக்கிக் கவளம் செய்து தருவதானால், ஒரு சிறு பகுதியே அதற்குப் பல நாளுக்குப் போதுமானதாகும். அதே போல, அறிவற்ற மன்னன் தன் வலி கருதிக் குடிகளை வருத்திப் பொருள் பெறத் தொடங்கின், அவனும் வாழான்; அவனால் உலகமும் கெடும். அவ்வாறன்றி, அறிவுடை வேந்தன் வளம் நிறைந்து வாழும் குடிமக்களிடமிருந்து ஆறில் ஒன்று கடமையாகப் பெறுவானாயின், அரசும் சிறக்கும்; நாடும் செழிக்கும்,’ என்னும் கருத்தமைந்த

‘காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பன்னாட்(கு) ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்(கு) உணினே

வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான்; உலகமும் கெடுமே.' **(புறநானூறு. 184)**

என்னும் பாடலைப் பாடினார்.

புலவர் பாடலில் அறத்தின் குரல் முழங்குகின்றதன்றோ? புலவரின் முழக்கம் கேட்ட புவியாள் மன்னன் கலை நெஞ்சும் கருணை உணர்வும் கொண்ட காவலன் அல்லனோ? கவிதை உள்ளத்தில் ஆழ்ந்திருக்கும் உண்மையின் ஆற்றலை அனுபவத்தால் அறிந்த தமிழரசன் அல்லனோ? அவன் சான்றோராகிய **பிசிராந்தையாரின் சொற்களைப் பொன்னே போல் போற்றி நல்லாட்சி நடத்தினான். 'அறிவுடை நம்பி' என்ற இயற்பெயர் பெற்ற அவன்,** அதனையே அழியாப் புகழ்ச் சிறப்பினைக் குறிப்பதாகவும் பெற்றான், அவன் அல்லனோ மன்னன்! அவன் அரசன்றோ தமிழரசு!

அறிவுரம் பெற்ற பிசிராந்தையாரின் உடல் பாண்டி நாட்டில் உலாவிக்கொண்டிருந்தது. ஆனால், அவர் உள்ளமோ, உறந்தையிலேயே வாழ்ந்தது. அந்நாளில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சோழ வேந்தன் **கோப்பெருஞ்சோழன்.** அவன் ஆட்சியில் பொன்னி வளநாடு குறையேதுமின்றிப் பொலிவுற்று விளங்கியது. பாணரும் பரிசிலரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தனர். சோழன் தலை வாயிலை நாடி வந்த கலைஞர் அனைவரும் கைநிறையப் பொன்னும் பொருளும் மணியும் துகிலும் பரிசிலாகப் பெற்று மீண்டனர். பசியால் வாடி வந்த இரவலர்க்கெல்லாம் ஆமையின் இறைச்சியையும் ஆரல்மீனின் கொழுவிய சூட்டையும் விளைந்த வெங்கள்ளையும் அவர் வேட்கை தீருமட்டும் தருவதில் என்றும் மன்னன் சலிப்புக் கண்டதில்லை. **அவன் திருவோலக்கம் எஞ்ஞான்றும் இசை முழங்கும் பெருவிழாக் காட்சியையே அளித்தது. அவன் நன்னாடோ, நாளும் வற்றாத புது வருவாய் மிக உடையது.** இத்தகைய சிறப்புக்களை யெல்லாம் பெற்று விளங்கிய அக்கோப்பெருஞ்சோழன், கோழியூராம் உறையூரினைத் தலைநகராக உடைய ஒப்பற்ற வேந்தனாய் விளங்கினான்; தன்

வாழ்நாள் முழுதும் பாணர் குடியை வாட்டி வதைத்து வந்த பசிப்பிணிக்குப் பெரும் பகைவனாய் விளங்கி விழுப்புகழ் பெற்றுத் திகழ்ந்தான்; அதோடு புரையில்லா நட்பினை உடைய **பொத்தியார்** என்னும் புலவரோடு மாறாத் தோழமை பூண்டு நாடோறும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்து இன் புற்றிருந்தான். இவ்வுண்மைகளையெல்லாம் சான்றோராகிய பிசிராந்தையார் பாடல் ஒன்றே நமக்கு உளங்கொளும் வகையில் சாற்றுகின்றது :

'நும்கோ யாரென வினவின் எம்கோக்
களமர்க்(கு) அரிந்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம்வீட ஆரா
ஆரற் கொழுஞ்சூ(டு) அங்கவு ளடாஅ
வைகுதொழின் மடியு மடியா விழவின்
யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தில் நண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலும் நக்கே" (புறநானூறு. 212)

நட்பிலும் பெட்பிலும் சிறந்து விளங்கிய கோப்பெருஞ்சோழன் நற்பண்புகள், சான்றோராகிய பிசிராந்தையாரின் நெஞ்சைக் கவர்ந்தன. தாம் இருப்பது பாண்டி நாடே ஆயினும், அவன் வாழ்வது சோழ நாடே ஆயினும், 'கேட்டு வேட்ட' அவர் கலை நெஞ்சம் கோப்பெருஞ்சோழன் பால் மாறா அன்பு கொள்ளலாயிற்று. புலவரைப் போன்றே கோப்பெருஞ்சோழனும் நெடுந் தொலைவில் இருந்த புலவர் பெருமானாராகிய பிசிராந்தையாரின் இளமை தவழும் வளமை நிறைந்த வாழ்வினையும் புலமை நலங்கனிந்த கலைநெஞ்சின் ஆழத்தையும், உறுதி படைத்த ஒழுக்கத்தின் விழுப்பத்தினையும் 'செவி வாயாக நெஞ்சு களனாக'ப் பல காலும் சான்றோர் வாயிலாகக் கேட்டு அறிந்து, அவர்பால் தீராக் காதல் கொண்டான். **இருவருக்கும் இடையே எழுந்த அன்புணர்வு-ஆர்வமாய் -நட்பாய்-காதலாய்-அதனினும் சிறந்த பெரும்பேருணர்வுமாய் உருக்கொள்ளல் ஆயிற்று.** இருவருக்கும் இடையே இருந்த நட்பின்-காதலின்-திறத்தையெல்லாம் அவர்கள் பாடிய அருந்தமிழ்ப் பாடல்களே

இன்றும் நமக்கு எடுத்துரைக்கும் வல்லமை பெற்று விளங்குகின்றன. சான்றாக ஈண்டுப் புலவர் பிசிராங்தையார் பாடல் ஒன்றைக் காணல் சாலும்.

'விரிகதிர் பரப்பி உலகமுழுதாண்ட ஒருதனித் திகிரி உரவோன்' மலை வாயில் வீழ்ந்துவிட்டான். கதிரவனை விழுங்கிய காரிருளைத் துரத்திக்கொண்டே நீல வானில் பால் நிலவு தன் முழு அழகையும் காட்டிய வண்ணம் எழுகிறது. **தமிழ் போல ஓங்கி உயர்ந்து விரிந்து பரந்து கிடக்கும் விண்ணில் தோன்றிய முழு நிலவை-**அத்தண்ணிலவைப்-பருகிய வண்ணம் பிசிராந்தையார் தம் இல்லத்து இளமரக்காவில் வீற்றிருந்தார். கங்குல் நங்கை சூடிய மல்லிகை மலர் போல விளங்கும் அவ்வழகிய நிலா அவர் உள்ளத்தில் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சியது. அஃது இன்ப உணர்வை அள்ளி வழங்கிய அந்நேரத்திலேயே துன்ப உணர்வையும் தோற்றுவித்துப் புலவர் பெருமானரின் கலை நெஞ்சை வெதுப்பத் தொடங்கியது. புலவர் பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழனது ' உயிர் ஒம்பும்' உழுவல் நண்பர்-உள்ளம் காதற்கடலாயிற்று. வெண்ணிலவைக் கண்டு பொங்கும் விரிதிரைக் கடல் போல அவர் காதல் நெஞ்சில் உணர்வு அலைகள் ஓவென எழுந்து முழங்கலாயின. அம்முழக்கத்தின் எதிரொலியை இன்றும் நாம் அவர் பாடிய அழகிய பாடலில் கேட்கலாம்.



http://www.akaramuthala.in/modernliterature/katturai/%E0%AE%92%E0%AE%B3%E0%AE%B5%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D-8-%E0%AE%A8-%E0%AE%9A%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%80%E0%AE%B5%E0%AE%BF/

சங்கக்காலச் சான்றோர்கள் – 17

ஔவையார் (தொடர்ச்சி)

ஆனால், அந்தோ! ஔவையாரின் கவிதையும் கண்ணீருங்கூட இனி அதிகமானை உயிர்ப்பியாவே! அதியமான் வாழ்வு அவ்வளவு கசப்பான பாடத்தைக் கடுந்துயரொடு கலந்து இவ்வுலகுக்கு உணர்த்திவிட்டது. அணுவினும் நுண்ணியதாய்-அணுவைப் பிளந்தால் தோன்றும் ஆற்றலினும் பன்னூறு மடங்கு அதிகமான பேராற்றல் படைத்ததாய் விளங்கும் இயற்கையின் ஆற்றலை-பரந்த பேரூழின் வல்லமையை-என்னென்று கூறுவது! 'வாளெடுத்தவன் வாளால் மடிவான்,' என்ற சான்றோரின் வாக்கு அதிகமான் வாழ்வில் எவ்வளவு துயரக் காட்சிகளோடு கலந்து மெய்யாகிவிட்டது! 'மனிதனது ஒவ்வொரு செயலும் தன் எதிர்ச் செயலைக் கண்டே தீரும்,' எனும் இயற்கையின் சட்டத்தை எவரே உடைக்க வல்லார்? தீயின் சுடர் வானோக்கி எரிவதும், வெள்ளம் கீழ் நோக்கி விரைவதும் போலன்றோ தவிர்க்க முடியாத தன்மையதாய் அவ்வியற்கையின் ஆற்றல் விளங்குகிறது? அதிகமான் மாண்டான். தகடூர் வீழ்ந்தது. வரலாறாகிவிட்ட இச்செய்திகளைப் பின் வரும் **பதிற்றுப்பத்து** அடிகள் விளங்குகின்றன:

'பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்றமகன்
கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற் றானை யதிக மானொ(டு)
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்(டு)

உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டு‘ [1]

. . . . .

‘வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர் நூறி
பேஎ மன்ற பிறழ நோக்கியவர்
ஒடுறு கடுமுரண் துமியச் சென்று
வெம்முனை தபுத்த காலை ‘ [2]

வீரமரணமடைந்த அதிகமான் பொன்னுடலம் ஈமச் சிதை ஏறியது. அதிகமானது அருமை மகன் **பொகுட்டெழினி** நீர் வடியும் கண்களோடும் குருதி கொதிக்கும் நெஞ்சோடும் தந்தையின் சிதைக்குத் தீயிட்டான். உற்றாரும் மற்றாரும், இரவலரும் இல்லோரும், பாணரும் பாடினியரும், கூத்தரும் விறலியரும் கோவெனக் கதறி அழுதனர். ஈமத்தீச் சுழன்று சுழன்று எழுந்தது; சுடர் விட்டு எரியலாயிற்று. ஔவையாரின் அருள் உள்ளம் கொதித்துக் குமுறியது. அவர் பிள்ளையைப் பறிகொடுத்த பெற்றவளைப்போல, துடிதுடித்து அழுது அரற்றினர்.

“அந்தோ! ஈம வெந்தீயே! நீ எந்தை உடலை எரிக்காது போயினும், அன்றி விண்ணுற எழுந்து எரித்து நீறாக்கினும், அவனுடைய ஞாயிறு அன்ன புகழை உன்னால் ஒரு நாளும் எரிக்க முடியாது. அதிகர் கோமானே, அருங்கொடை வள்ளலே, ஆர்வலர் புன்கண் தீர்த்த அருமருந்தே, ஈரநெஞ்சத்தோடு மாரி போல வழங்கிய கருணை முகிலே, நீயின்றிக் கழிகின்ற காலையும் மாலையும் இனி என் வாழ்நாள் காணாது இருள் சூழ்ந்து ஒழியட்டும்; உனக்கு உற்றவர், நடுகல் நட்டு நாரால் அரிக்கப்பட்ட மதுவை நீ அருந்து வாயெனக் கருதிச் சிறு கலத்தினின்றும் உகுக்கின்றனர். கோடுயர் மலையுடன் நாடு முழுதும் கொடுப்பினும் கொள்ளாத பண்பினை உடைய நீயோ, இப்புல்லிய மதுத்துளிகளை நுகர்வாய்! ” என்னும் கருத்தமைந்த

‘எறிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈம ஒள்ளழல்
குறுகினுங் குறுகுக; குறுகாது சென்று
விசும்புற நீளினும் நீள்க; பசுங்கதிர்த்

திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயி றன்னோன் புகழ்மா யலவே.' (புறநானூறு, 231)

இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழும் நாளே;
நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே!' (புறநானூறு, 232)

என்னும் பாக்கள் ஔவையாரின் அரற்றலை விளக்குவன.

இவ்வாறு எழுத்தறிவார் இதயத்தையெல்லாம் பாகாய் உருக்கிக் கண்ணீர் பெருக்கெடுத்தோடச் செய்யும் கையறுநிலைப் பாடல்களைப் பாடிய ஔவையார், அதிகமான் மறைவிற்குப் பின்னும் சிலகாலம் "இன்னும் இறப்பு வரவில்லையே! சேண் உயர் உலகிலேனும் சென்று அதிகமானைக் காணோமோ!" என்ற கலகத்துடனையே வாழ்வை நடத்தியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

அதிகமான் மகன் பொகுட்டெழினி மிக இளையனாயிருந்தான். அதனால், அவனுடன் ஔவையார் சூழ்ச்சித் துணைவராய்த் தங்கி, 'விலங்கு பகை கடிந்த கலங்காச் செங்கோலனாய்' அவன் விளங்க, அவனுக்கு உற்ற துணைவராய் விளங்கினார். பொய்யா ஈகைப் பொகுட்டெழினியும் தன் நிழல் வாழ்வோர் துன்ப இருள் சிறிதும் காணாதவாறு ஆட்சி புரிந்தான். மேலும், 'இசை விளங்கு கவிதை நெடியோனா'ய் விளங்கிய அவன், தன் அருமைத் தந்தையைப் போன்றே விருந்திறை நல்கும் வள்ளியோனாயும் திகழ்ந்தான். அத்தகையோன் வீரம், கருணை, காதல் முதலிய பண்புகளையெல்லாம் போற்றியவாறு ஔவையார் ஓரளவு தம் வாழ்வில் வீழ்ந்த பேரிடியால் விளைந்த பெருந்துயரை மறந்திருந்தார், பின்னர் அவர் 'தமிழ் கூறும் நல்லுலக'த்தின் பல்வேறு பகுதிகளையும் காண விழைந்தார். அது காரணமாகத் தகடூரினின்றும் வெளிப்போந்தவர், வள்ளுவர் குடியில் தோன்றியவனும், நாஞ்சில் மலைக்கு உரியவனுமாகிய **நாஞ்சில் வள்ளுவனைக்** கண்டு, அவன் செம்மைசால் பண்பினன் என்பதை அறிந்து, அவன்பால் சென்று, பொன்னே துகிலோ ஏதும்பெற

எண்ணாதவராய், உணவுக்குச் சிறிது அரிசியே வேண்டினார். அவனோ, அருந்தமிழ்ப் புலவர் வரிசை அறிந்து வழங்குபவன் ஆகலின், ஔவையாரின் பெருமை யெல்லாம் உணர்ந்தவனாய் யானைப் பரிசில் அளித்தான். அது கண்டு ஔவையார் அவன் கொடையை வியந்து, "செந்நாப் புலவீர், நாஞ்சில் மலை வேந்தன் மெல்லிய அறிவினனே, இஃது உறுதி. யாம் இலைக்கறிமேல் தூவச் சிறிது அரிசி வேண்டினேமாக, அவன் பரிசிலர்க்குதவும் வரிசை அறிதலால், எம் வறுமையைப் பார்த்தலே அன்றித் தன் மேம்பாட்டையும் சீர்தூக்கிப் பார்த்துப் பெரிய மலை போல்வதொரு யானையை அளித்தான். ஆதலால், ஒருவர்க்கு ஒன்றனைக் கொடுக்குமிடத்து அப்பெற்றிப் பட்டதொரு தெளியாக்கொடையும் உளதோதான்! பெரியோர் தாங்கள் செய்யக்கடவ முறைமையைத் தெரிந்து பாதுகாத்துச் செய்யார்கொல்!" எனக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் அவனைப் புகழ்ந்தார்.


பின்னர் ஔவையார் உறையூரின் கண் சோழ அரசன் இராயசூய வேள்வி இயற்றுகின்றான் என்பது அறிந்து ஆங்குச் சென்றார். அவன் **சேரமான் மாரி வெண்கோ**வும் **பாண்டியன் உக்கிரப் பெரு வழுதி**யும் சோழ வேந்தனோடு ஒருங் கிருக்கக் கண்டார். வாழ்நாளெல்லாம் தமிழ் வேந்தரும் தமிழ் வள்ளல்களும் தங்களுள் மாறுபாடு கொண்டு போரிட்டு மடிவதையே கண்டு மனம்வெந்திருந்த **ஔவையாருக்குத் தமிழகத்து முடியுடை மூவேந்தரும் ஒருங்கிருந்த காட்சி எல்லையில்லா இன்பத்தை அளித்தது**. அவர் அவ்வின்ப உணர்வின் எல்லையில்நின்று அம் மூவேந்தரையும் அருந்தமிழ்க் கவிதையால் போற்றினார்.

(தொடரும்)


ஆராய்ச்சிக்
கட்டுரைகள்


சங்ககாலச்
சான்றோர்கள்


இருபெருந்
தலைவர்


சிலப்பதிகார
விருந்து



மங்கல
மீனாட்சி



செந்தமிழ் வளர்க்கும்
சிந்தனைகள்
ந. சஞ்சீவி


மானங்காத்த
மருதுபாண்டியர்


1806
பாரி நிலையம்


கும்மந்தான்
கான்சாகிபு


திருநெல்வேலி
சரித்திரம்
ந. சஞ்சீவி




தமிழியல் கட்டுரைகள்
ந. சஞ்சீவி
PAPERS IN TAMILOLOGY
N. SANJEEVI



பேராசிரியர் டாக்டர் ந.சஞ்சீவி (02.05.1927 – 22.08.1988)

https://www.voiceofvalluvar.org/%E0%AE%AA%E0%AF%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%9F%E0%AE%BE%E0%AE%95%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%A8-%E0%AE%9A%E0%AE%9E/

பேராசிரியர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் திருச்சியில் பிறந்தவர். காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பணியைத் தொடங்கிய இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், துறைத் தலைவர் என உயர்ந்தவர். 1974 – 1976 ஆகிய இரு கல்வியாண்டுகளில் தமிழ் முதுகலையில் இலக்கியத் திறனாய்வு பாடத்தினை வாரம் ஒரு முறை கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அதன்பிறகு 1976 இல் அன்றைய துணைவேந்தர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தொடங்கிய ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டத்தின் முதல் அணி மாணவராக இவரிடம் சேர்ந்து பாடங்கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன். நாள்தோறும் தி இந்து, தி இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய ஆங்கில நாளிதழ்களைப் படித்துக் குறிப்பெடுத்துக் கொண்டு வகுப்பிற்கு வரவேண்டும். பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரைப் பிள்ளை அவர்கள் எழுதிய ஆங்கிலத் தமிழ் அகராதியைக் கையில் வைத்திருக்க வேண்டும். எப்பொழுது வேண்டுமானாலும் கேள்வி கேட்பார். இப்படிப் பேராசிரியர் ந.சஞ்சீவியோடு பல மலரும் நினைவுகள் எனக்கு உண்டு.

சங்ககாலச் சான்றோர்கள், மானங் காத்த மருதுபாண்டியர், மருதிருவர், வீரத்தலைவர் பூலித்தேவர், இருபெரும் தலைவர்கள், வேலூர் புரட்சி, கும்மாந்தான் கான் சாகிபு, வெள்ளையர் கண்ட தமிழ் வீரம், விடுதலை இயக்க வரலாறு, வெள்ளை ஆதிக்க வரலாறு, போரும் வேலும் போன்ற வரலாற்று நூல்களை எழுதியவர்.
‘இலக்கிய இயல் அ ஆ’ எனும் நூல் நான் மாணவராக இருந்தபோது அவர் வெளியிட்ட திறனாய்வு நூல். கால்டுவெல் இயற்றிய History of Tinnaveli எனும் நூலைத் தென்பாண்டித் திருநாடு அல்லது திருநெல்வேலி வரலாறு எனும் தலைப்பில் மொழி பெயர்த்து வெளி

யிட்டார். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களையும் முந்நூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியவர். தமிழ்த்துறைத் தலைவராக இருந்தபோது நான்கு பெரும் கருத்தரங்குகள் நடத்திப் பின்வரும் நான்கு நூல்களைப் பதிப்பாசிரியராக இருந்து பதிப்பித்துள்ளார்.

1. *First all India Tirukkural Research Seminar papers – 1972*

(கருத்தரங்கம் நடந்தது மே1972, நூலாக வெளிவந்தது 1973)

1. *பல்கலைப் பழந்தமிழ் – 1974*
2. *பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ் – 1975*
3. *தெய்வத் தமிழ் 1975.*

ஒப்பு நோக்குக, உற்று நோக்குக என்பதை மந்திர மொழியாகக் கொண்டு வாழ்ந்தவர். ஆய்வே தொழில், தொண்டு, தொழுகையாகக் கொண்டு ஒழுகிய தமிழ்த்தொண்டர்.

நன்றி
பேராசிரியர் அரங்க இராமலிங்கம்
தொகுப்பாசிரியர்
திருக்குறள் கலைக் களஞ்சியம் (10 தொகுதிகள்- 5000 பக்கங்களுக்கு மேல்)
வர்த்தமானன் பதிப்பகம்
சென்னை
Vardhaman Pathippagam
044-28144995

'சிலம்புத்தேன்' என்பது செஞ்சொற்புலவர் [ந. சஞ்சீவி] அவர்களால் எழுதப்பட்ட, சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயங்களையும், காப்பியச் சிறப்பையும் போற்றும் மிகச்சிறந்த திறனாய்வு நூலாகும். இது சிலப்பதிகாரத்தில் உள்ள கவிதைச் சுவையைத் 'தேன்' போன்று இனிய நடையில் விளக்கும் நூலாகக் கருதப்படுகிறது.

சிலம்புத்தேன் நூலின் சிறப்பம்சங்கள்:


- **ஆசிரியர்:** ந. சஞ்சீவி (தமிழறிஞர்).

- **பொருள்:** சிலப்பதிகாரத்தின் கதைமாந்தர்கள், கவிதை நயம் மற்றும் இலக்கியச் சிறப்பு குறித்துப் பேசுகிறது.
- **பரிசு:** இந்நூல் சாகித்ய அகாதமி விருது பெற்றது.
- **படைப்பு:** பண்டைக் கவிஞர்களின் பழுதற்ற காவியத் திறனை இந்நூல் விரிவாக ஆராய்கிறது.

முக்கியத் தலைப்புகள்:

- சிலம்பின் புகழ் (கண்ணகி, கோவலன், மாதவி பற்றிய ஆய்வு).
- இளங்கோவடிகளின் கவித்திறன்.
- சிலப்பதிகாரத்தில் மணம்பூக்கும் செந்தமிழ்.

சிலப்பதிகாரத்தை ஆழ்ந்து படிக்க விரும்பும் வாசகர்களுக்கு, இந்நூல் அதன் தேன் போன்ற இனிய தமிழ்ச் சுவையை உணர்த்தும் ஒரு சிறந்த வழிகாட்டி.



பேராசிரியர் நா. சஞ்சீவி எழுதிய **"வீரத்தலைவர் பூலித்தேவர்"** என்ற நூல், தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக முதன்முதலில் ஆயுதம் ஏந்திப் போராடிய நெற்கட்டான்செவல் பாளையக்காரர் பூலித்தேவரின் வீர வரலாற்றை விவரிக்கிறது. 1961-ல் வெளியான இந்த நூல், பூலித்தேவனின் தியாகம், அரசியல் சாணக்கியம் மற்றும் பாளையக்காரர்களை ஒன்றுதிரட்டிய பாங்கினை போற்றுகிறது.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **வரலாற்றுப் பின்னணி:** வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்பே, நெல்லைச் சீமையில் ஆங்கிலேயரை எதிர்த்த முன்னோடிப் போராட்ட வீரர் பூலித்தேவர் என்பதை ஆணித்தரமாக இந்நூல் நிறுவுகிறது.
- **பொருளடக்கம்:** பூலித்தேவரின் நெற்கட்டான்செவல் ஆட்சி, ஆங்கிலேயருக்குப் கப்பம் கட்ட மறுத்தது, திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் கூட்டணி அமைத்தது, மருதநாயகம் (கான் சாகிபு) உடனான மோதல்கள் போன்றவை இதில் விவரிக்கப்பட்டுள்ளன.
- **நூலாசிரியர் பார்வை:** தமிழ் இலக்கியம் மற்றும் வரலாற்றில் ஆழ்ந்த புலமை கொண்ட பேராசிரியர் சஞ்சீவி, பல வரலாற்றுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நூலை எழுதியுள்ளார்.

இந்த நூல் (பார்க்க: தமிழ் விக்கிப்பீடியா) பூலித்தேவர் புகழைப் பாடும் ஒரு சிறந்த ஆவணமாகக் கருதப்படுகிறது.


இந்திய விடுதலையும்
தமிழ் இலக்கியமும்
(இந்திய விடுதலை வெள்ளி விழாக் கருத்தரங்கு)

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1974

பேராசிரியர் ந. சஞ்சீவி தொகுத்து, சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1974-ல் வெளியிடப்பட்ட **'இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்'** (இந்திய விடுதலை வெள்ளி விழாக் கருத்தரங்கு) என்ற நூல், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் இலக்கியத்தின் பங்கை விளக்கும் ஒரு முக்கிய


ஆவணமாகும். இது 1972-ல் நடந்த கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **பொருளடக்கம்:** தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட உணர்வுகளைப் பாடிய கவிதைகள், கதைகள், நாவல்கள் மற்றும் கட்டுரை இலக்கியங்களைப் பற்றி இந்த நூல் விவாதிக்கிறது.
- **ஆசிரியர்/பதிப்பாசிரியர்:** டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து, இந்த ஆய்வுக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி, இந்த நூலைத் தொகுத்தளித்தார்.
- **காலம் & சூழல்:** இந்திய விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு, தமிழ் இலக்கியங்களில் சுதந்திர வேட்கை எவ்வாறு வெளிப்பட்டது என்பதை ஆய்வு செய்ய 1974-ல் வெளியிடப்பட்டது.
- **ஆய்வுப் பரப்பு:** பாரதியார், கவிமணி உள்ளிட்ட பல்வேறு கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் தேசபக்தி படைப்புகள் குறித்து இந்த நூல் விவாதிக்கிறது.

இந்த நூல் தமிழ் இலக்கியத்தில் தேசபக்தி இலக்கியம் என்ற தனித்துவமான வகையறாவைப் புரிந்துகொள்ள சிறந்த ஆதாரமாகத் திகழ்கிறது.





பிஷப் கால்டுவெல் எழுதிய "A History of Tinnevelly" (1881) நூலை, பேராசிரியர் **ந. சஞ்சீவி** மற்றும் **கிருட்டிணா சஞ்சீவி** தம்பதியினர் தமிழில் மொழிபெயர்த்து, விரிவான ஆய்வுரைகளுடன் **1977**-இல் சென்னை காவ்யா பதிப்பகம் மூலம் வெளியிட்டனர். இது திருநெல்வேலியின் பண்டைய காலம் முதல் 1801-இல் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்படும் வரையிலான அரசியல் மற்றும் சமூக வரலாற்றை விளக்கும் முக்கிய நூலாகும்.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **மூலநூல்:** டாக்டர் கால்டுவெல்லின் ஆங்கில நூல், பத்தாண்டுகளுக்கு மேலான ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்டது.
- **மொழிபெயர்ப்பு:** 1970-1976 வரை 'சத்ய கங்கை' இதழில் 'தென்பாண்டித் திருநாடு' என்ற பெயரில் தொடராக வெளியாகி, பின்னர் புத்தகமாக வெளியிடப்பட்டது.
- **சிறப்பு:** மூல நூலில் இல்லாத ஐந்து பிற்சேர்க்கைகள் (Appendices) மற்றும் விரிவான ஆய்வுரைகளை சஞ்சீவி இதில் சேர்த்துள்ளார்.
- **பொருளடக்கம்:** திருநெல்வேலியின் புராதன காலம், பாண்டியர்கள், நாயக்கர்கள், நவாப்கள், பாளையக்காரர்கள், மற்றும் ஆங்கிலேயர் ஆட்சி முறை ஆகியவை இதில் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்த நூல் திருநெல்வேலி மாவட்ட வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவும் மிக முக்கியமான ஆவணமாகக் கருதப்படுகிறது.

டாக்டர் ந. சஞ்சீவி எழுதிய 'வீரத் தமிழகத்தில் விடுதலை வேள்வி' (அல்லது 'வெள்ளையர் கண்ட தமிழ் வீரம்') தமிழகத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றை, குறிப்பாகப் பூலித்வர், மருது பாண்டியர், வேலூர்ப் புரட்சி போன்ற வீரச் சம்பவங்களை விவரிக்கும் முக்கிய ஆய்வு நூலாகும். இது 1959-ல் வெளியான

'செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **ஆசிரியர்:** டாக்டர் ந. சஞ்சீவி (1927-1988), ஒரு சிறந்த தமிழ் ஆய்வாளர் மற்றும் பேராசிரியர்.
- **பொருள்:** பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து தமிழகத்தில் நடந்த தொடக்ககாலப் போராட்டங்களை இந்நூல் ஆவணப்படுத்துகிறது.
- **முக்கியப் பகுதிகள்:**
    - பூலித்தேவர், மருது பாண்டியர்கள் போன்ற வீரர்களின் போராட்டங்கள்.
    - வேலூர்ப் புரட்சி (1806).
    - வெள்ளையர்களுக்கு எதிரான தமிழர்களின் வீர முழக்கம்.
- **வெளியீடு:** இந்த ஆய்வுத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள், சென்னை பாரி நிலையம் போன்ற பதிப்பகங்கள் மூலம் 'வெள்ளையர் கண்ட தமிழ் வீரம்' என்றும், பிற பெயர்களிலும் வெளிவந்துள்ளன.

நாடகப் பேராசிரியர் நால்வர் என்பது தமிழ் அறிஞர் **ந. சஞ்சீவி** அவர்கள் எழுதிய ஒரு நாடகத் துறை சார்ந்த நூல் ஆகும். இந்நூல் தமிழ் நாடகக் கலை மற்றும் நாடகக் கலைஞர்களின் வரலாற்றை விளக்குவதாக அமைகிறது. ந. சஞ்சீவி அவர்கள் எழுதிய, 1959-ல் வெளியான "செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்" நூலில் இந்நூல் குறிப்பிடப்பட்டுள்ளது.

முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** பேராசிரியர் ந. சஞ்சீவி.
- **பொருள்:** தமிழ் நாடகம்/நாடக வரலாறு.
- **குறிப்பு:** சஞ்சீவி அவர்களின் முக்கிய நூல்களின் பட்டியலில் இந்நூல் இடம் பெற்றுள்ளது, இது பெரும்பாலும் தமிழ்

நாடகத்தின் வளர்ச்சிக்குக் காரணமான நான்கு முக்கிய ஆளுமைகளைப் பற்றியதாக இருக்கலாம் (நால்வர் - நான்கு பேர்).

இந்த நூல் நாடகத் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு ஒரு வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகிறது.

பேராசிரியர் ந. சஞ்சீவி எழுதிய "**வீடணன் - ஒரு திறனாய்வு**" (Veedanan - Oru Thiranaivu) என்பது கம்பர் காவியத்தில் வரும் வீடணனின் பாத்திரப்படைப்பை ஆழமாக ஆராயும் ஒரு முக்கிய விமர்சன நூலாகும். 1977-ல் வெளிவந்த இவருடைய மங்கல மனைமாட்சி நூலில் இதற்கான குறிப்புகள் அச்சில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமாயணத்தில் அறத்தின் குரலாக ஒலிக்கும் வீடணனின் பாத்திரத்தை, சூழல் மற்றும் கொள்கை அடிப்படையில் சஞ்சீவி திறனாய்வு செய்துள்ளார்.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **பாத்திர ஆய்வு:** வீடணன் ஏன் தன் சகோதரன் இராவணனை விட்டுவிட்டு இராமனிடம் அடைக்கலம் புகுந்தான் என்பதை அறநெறி சார்ந்து விளக்குகிறது.
- **திறனாய்வு அணுகுமுறை:** கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநயத்தையும், பாத்திரப்படைப்பின் நுணுக்கங்களையும் சஞ்சீவி தன் பாணியில் பகுப்பாய்வு செய்துள்ளார்.
- **படைப்பாளி:** ந. சஞ்சீவி (1927–1988) சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர், இவர் கம்பராமாயண ஆய்வுகளில் சிறந்தவர்.
- **பதிப்பு விவரம்:** இந்நூலின் பெயர் 1977-ல் வெளியான மங்கல மனைமாட்சி நூலில் உள்ள நூல் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

இராமாயண கதாபாத்திரங்களை, குறிப்பாக வீடணனை, வெறும் தியாகியாகவோ அல்லது துரோகியாகவோ பார்க்காமல், அறத்தின் அடிப்படையில் அணுகிய ஒரு சிறந்த திறனாய்வு நூல் இது.

பேராசிரியர் ந. சஞ்சீவி எழுதிய **ஆய்வியல் அரிச்சுவடி** (Aayvial Arichuvadi) என்பது தமிழ் ஆராய்ச்சி மாணவர்களுக்கான மிகச்சிறந்த வழிகாட்டி நூலாகும். இது ஆய்வு முறைகள், தரவு சேகரிப்பு மற்றும் கட்டுரை எழுதுதல் போன்ற அடிப்படை அம்சங்களை விளக்குகிறது. 1970-களில் வெளிவந்த இந்த நூல், தமிழ் இலக்கிய ஆய்வில் நெறிமுறைகளை வகுத்துத் தந்த முன்னோடிப் படைப்பாகக் கருதப்படுகிறது.

ஆய்வியல் அரிச்சுவடி - முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** பேராசிரியர் முனைவர் ந. சஞ்சீவி, சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்.
- **பொருள்:** தமிழ் இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாடு சார்ந்த ஆய்வுகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான அரிச்சுவடி போன்ற அடிப்படை வழிகாட்டி.
- **பயன்:** ஆய்வுக்கட்டுரை எழுதுதல், தலைப்புத் தேர்வு, நூலகப் பயன்பாடு மற்றும் ஆய்வு முடிவுகளைத் தொகுத்தல் ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது.
- **சிறப்பு:** இவரின் பிற நூல்களான 'இலக்கிய இயல்', 'ஆராய்ச்சி கட்டுரை' போன்றவற்றுடன் இணைந்து, இது ஆய்வு மாணவர்களுக்குப் பாடநூலாகப் பயன்படுகிறது.

1977-க்கு முன் வெளியீடு கண்ட இந்தப் படைப்பு, தமிழ் விக்கிப்பீடியா மற்றும் பிற தரவுத்தளங்களில் சஞ்சீவியின் மிக முக்கிய ஆய்வுத் தொகுப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது



பேராசிரியர் ந. சஞ்சீவி எழுதிய "**மானங்காத்த மருது பாண்டியர்**" நூல், சிவகங்கையை ஆண்ட மருது சகோதரர்களின் (பெரிய மருது, சின்ன மருது) வீரத்தையும், பிரிட்டிஷாரை எதிர்த்து அவர்கள் செய்த தியாகத்தையும் விவரிக்கும் வரலாற்று நூல். இது 1966-ல் பாரி நிலையத்தால் வெளியிடப்பட்டது, மருது பாண்டியரின் போராட்டங்கள் மற்றும் செவிவழிச் செய்திகளை ஆதாரங்களுடன் விவரிக்கிறது.

நூல் பற்றிய முக்கிய தகவல்கள்:

- **ஆசிரியர்:** பேராசிரியர் ந. சஞ்சீவி.
- **பொருள்:** வரலாறு / வாழ்க்கை வரலாறு.
- **பதிப்பகம்:** பாரி நிலையம், சென்னை (1966).
- **பொருள்: ** மருது சகோதரர்களின் வீர மரணம் மற்றும் பிரிட்டிஷ் எதிர்ப்பு (1801).
- **சிறப்பு:** இது மருது பாண்டியரின் வீரத்தைப் போற்றும் வகையில் எழுதப்பட்ட ஒரு சிறந்த வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகிறது.
- **கிடைக்கும் இடம்:** Marina Books போன்ற இணையதளங்களிலும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் PDF பதிப்பிலும் இது கிடைக்கிறது.

முக்கிய உள்ளடக்கங்கள்:

- மருது சகோதரர்களின் போராட்டத் திட்டங்கள்.

- பிரிட்டிஷாருடன் ஏற்பட்ட மோதல்கள்.
- 1801-ல் மருது பாண்டியர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை மற்றும் அவர்களின் தியாகம்.

நூலின் இணையப் பதிப்பு: இந்த நூல் Archive.org-ல் பொதுப் பயன்பாட்டிற்காக (Public Domain) கிடைக்கிறது.

ந. சஞ்சீவி எழுதியுள்ள **இயலிசை நாடகம்** (மற்றும் தமிழ் நாடக வரலாறு) என்னும் நூல், தமிழ் நாடகக் கலை மற்றும் அதன் வரலாற்றை விளக்கும் முக்கியமான ஆராய்ச்சி நூல் ஆகும். இது 1959-1960 காலப்பகுதியில் அவரது பிற நூல்களான 'செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்', 'நாடகப் பேராசிரியர் நால்வர்' ஆகியவற்றுடன் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது.

இயலிசை நாடகம் நூல் சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** பேராசிரியர் ந. சஞ்சீவி (1927-1988).
- **பொருள்:** தமிழ் நாடக வரலாறு, இயல், இசை, நாடகம் ஆகியவற்றின் சங்கமம்.
- **படைப்பு சூழல்:** இது பொதுவாக 1959-1960 வாக்கில் வெளியிடப்பட்ட தமிழ் நாடக ஆய்வுகளின் வரிசையில் இடம்பெறுகிறது.
- **பிற படைப்புகள்:** சஞ்சீவி 'சிலப்பதிகார விருந்து', 'கவிஞர் தரும் காட்சி', 'வீரத்தலைவர் பூலித்தேவர்' போன்ற பல வரலாற்று மற்றும் இலக்கிய நூல்களையும் எழுதியுள்ளார்.

இந்நூல் தமிழ் நாடகக் கலையின் தொன்மை மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியைப் பற்றி அறிய உதவும் சிறந்த ஆவணமாகும்

பேராசிரியர் ந. சஞ்சீவி எழுதிய "வெள்ளையர் கண்ட வீரத் தமிழகம்" (அல்லது வெள்ளையர் கண்ட தமிழ் வீரம்) என்பது தமிழக விடுதலைப் போராட்ட வரலாற்றை, குறிப்பாக வெள்ளையருக்கு எதிராகத் தமிழக வீரர்கள் புரிந்த போர்களை விவரிக்கும் ஒரு வரலாற்று நூல். இந்நூல் 1950-

60களில் வெளிவந்த, சஞ்சீவியின் உணர்ச்சிமிக்க வரலாற்று எழுத்துகளின் தொகுப்பாகும்.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- *வரலாற்றுப் பின்னணி: ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு கிளர்ச்சிகள் மற்றும் வீரர்களின் தியாகங்களை இது ஆவணப்படுத்துகிறது.*
- *உள்ளடக்கம்: பூலித்தேவர், மருது பாண்டியர்கள், வேலுநாச்சியார் போன்ற வீரத் தலைவர்களின் போராட்டங்கள் மற்றும் வேலூர்ப் புரட்சி போன்ற நிகழ்வுகளைப் பற்றிய கட்டுரைகளை இது கொண்டிருந்திருக்கலாம்.*
- *நடை: ந. சஞ்சீவியின் இயல்பான உணர்ச்சிமிக்க மற்றும் எழுச்சியூட்டும் தமிழ் நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*
- *ஆதாரம்: Anna Centenary Library மற்றும் Tamil Virtual Academy போன்றவை சஞ்சீவியின் படைப்புகளைப் பட்டியலிட்டுள்ளன.*

பேராசிரியர் ந. சஞ்சீவி சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் மற்றும் விடுதலைப் போராட்ட வரலாற்றை உணர்வுபூர்வமாக எழுதியவர்.



டாக்டர் ந. சஞ்சீவி எழுதிய **'[செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்](#)' (1959)**, *தமிழ் இலக்கியம், வரலாறு, பண்பாடு மற்றும் கலைகளைப் போற்றி, தமிழ் மொழியை வளர்ப்பதற்கான*

ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கும் ஒரு சிறந்த நூல். பாரி நிலையத்தால் வெளியிடப்பட்ட இந்தச் சிறிய நூல், தமிழ் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைச் சிந்தனைகளைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **மொழி வளர்ச்சி:** மொழி வளர்ச்சிக்குத் தேவையான கருத்துக்களை வலியுறுத்துகிறது.
- **ஆக்கப் பணிகள்:** தமிழ் இலக்கியம், கலை மற்றும் பண்பாட்டுத் துறைகளில் செய்யப்பட வேண்டிய ஆக்க வேலைகள் பற்றிய யோசனைகளை வழங்குகிறது.
- **ஆசிரியர்:** பேராசிரியர் ந. சஞ்சீவி, இலக்கியம் மற்றும் வரலாற்றுத் துறையில் ஆழ்ந்த அறிவார்ந்த கட்டுரைகளை எழுதியவர்.
- **காலம்:** இந்நூல் 1959-ல் சென்னையில் வெளியிடப்பட்டது.

இந்த நூல் தமிழுக்குச் செழுமை சேர்க்கும் கருத்துக்களைக் கொண்டிருப்பதால், தமிழ் ஆர்வலர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய ஒன்றாகக் கருதப்படுகிறது.


இந்திய விடுதலையும்
தமிழ் இலக்கியமும்
(இந்திய விடுதலை வெள்ளி விழாக் கருத்தரங்கு)
சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1974

பேராசிரியர் ந. சஞ்சீவி பதிப்பித்த **"இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்"** (1974) என்பது இந்திய விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய கருத்தரங்கின் தொகுப்பு நூலாகும். இது விடுதலைப்

போராட்டத்தில் தமிழ் இலக்கியத்தின் பங்கை, கவிதைகள், கதைகள், நாடகங்கள் வழியாக விவரிக்கும் ஒரு முக்கிய ஆய்வுப் படைப்பாகும்.


நூலின் சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி.
- **பதிப்பாளர்:** சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- **பதிப்பு ஆண்டு:** 1974.
- **உள்ளடக்கம்:** இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் இலக்கியத்தின் பங்கு, கவிஞர்களின் தேசபக்தி, விடுதலைப் போராட்டப் பாடல்கள், மற்றும் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் குறித்த கட்டுரைகள்.

முக்கியத் தலைப்புகள்:

- விடுதலை வேட்கையைத் தூண்டிய தமிழ் இலக்கியங்கள்.
- பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போன்றோரின் தேசபக்திப் பாடல்கள்.
- வேலூர்ப் புரட்சி (1806) போன்ற வரலாற்று நிகழ்வுகள்.

இந்த நூல் இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழர்களின் பங்களிப்பையும், இலக்கியம் எவ்வாறு சுதந்திர உணர்வை ஊட்டியது என்பதையும் ஆவணப்படுத்துகிறது.



டாக்டர் [ந. சஞ்சீவி](#) எழுதிய கட்டுரை நூல் **காற்றிலே மிதந்தவை** (1958). இது சென்னை பாரி நிலையம் மூலம் வெளியிடப்பட்ட ஒரு முக்கியமான இலக்கிய மற்றும் வரலாற்றுத் தொகுப்பு ஆகும். இந்த நூல் தமிழ் பண்பாடு, இலக்கியம் மற்றும் தலைவர்கள் குறித்த கட்டுரைகளைத் தாங்கி, வாசகர்களுக்குப் புதிய பார்வையை வழங்குகிறது.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** டாக்டர் ந. சஞ்சீவி, இவர் தமிழ் இணையக் கல்விக்கழகம் போன்ற தளங்களில் குறிப்பிடப்படும் மிகச்சிறந்த தமிழறிஞர்.
- **பொருள்:** இலக்கிய விமர்சனம், வரலாற்றுச் செய்திகள் மற்றும் ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள்.
- **பதிப்பு:** இது பாரி நிலையம், சென்னை மூலம் 1958 இல் வெளியிடப்பட்டது.
- **கிடைக்கும் இடம்:** விக்கிமூலம் மற்றும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் டிஜிட்டல் நூலகத்தில் இதை வாசிக்கலாம்.

நூல்கள்

எழுதியவை:

- 1806
- ஆராய்ச்சிக் கட்டுரைகள்
- இருபெருந்தலைவர்
- இலக்கிய இயல்
- கம்பன் ஒரு கொம்பன்
- கம்பன் நம்மவன்
- வீடணன் ஒரு திறனாய்வு
- உணர்வின் எல்லை
- கன்னியாகுமரி அன்னை மாயம்மா (அ.கா. பெருமாள் உடன் இணைந்து எழுதியது)
- கால்டுவெல்-திருநெல்வேலி சரித்திரம்
- கவிஞர் தரும் காட்சி
- இயலிசை நாடகம்
- பதிற்றுப்பத்துள் மூன்றாம் பத்து
- தமிழ் நாடக வரலாறு
- நாடகப் பேராசிரியர் நால்வர்
- காற்றிலே மிதந்தவை
- கும்மந்தான் கான்சாகிபு
- சிவகங்கைச் சிங்கங்கள்
- முதலில் முழக்கிய முரசு
- வீரபாண்டியன் விழுப்புகழ்
- வீரத் தமிழகத்தில் விடுதலை வேள்வி
- வெள்ளையர் கண்ட தமிழ் வீரர்
- வெள்ளையர் கண்ட வீரத் தமிழகம்
- விடுதலை இயக்க வரலாறு
- வெள்ளை ஆதிக்க வரலாறு
- போரும் வேரும்
- சங்க காலச் சான்றோர்கள்
- சிலப்பதிகார விருந்து
- சிலம்புத்தேன்
- சீனம் தரும் சிந்தனைகள்
- ஆய்வியல் அரிச்சுவடி
- படிப்படியே தமிழ்ப் பண்பாடு
- கருத்து மலர்கள்
- செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்

- இலக்கியத் தலைவர் கலைஞர்
- தமிழியல் கட்டுரைகள்
- மங்கல மனைமாட்சி
- மானங்காத்த மருது பாண்டியர்
- மருதிருவர்
- வீரத்தலைவர் பூலித்தேவர்
- வேலூர்ப் புரட்சி

பதிப்பித்தவை:

- First All India Tirukkural Research Seminar Papers
- பல்கலைப் பழந்தமிழ்
- தெய்வத் தமிழ்
- பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்
- இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்

பணி

1950 – 60 ஆம் ஆண்டுகளில் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர்.
1960 – 65 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ்விரிவுரையாளர்.
1965 -71 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இணைப் பேராசிரியர்.
1971- 76 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர்.
1976–80 ஆம் ஆண்டுகளில், இந்திராகாந்தியால் நடைமுறைப்படுத்தப்பட்ட நெருக்கடிநிலை எதிர்த்ததால், பணி இடைநீக்கம்.
1980 – 87 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறைத் தலைவர்.

எழுதிய நூல்கள்

முதற்பதிப்பு ஆண்டு	நூல்	குறிப்பு

1954	மானங்காத்த மருதுபாண்டியர்	
1954	சங்ககாலச் சான்றோர்கள்	
1956	மருதிருவர்	
1956	சிலப்பதிகார விருந்து	
1956	வேலூர்ப் புரட்சி	
	கவிஞர் தரும் காட்சி	இந்நூல் அச்சில் இருப்பதாக 1956ஆம் ஆண்டில் வெளிவந்த வேலூர் புரட்சி நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
1958	வீரத்தலைவர் பூலித்தேவர்	
1958	இருபெருந் தலைவர்கள்	
1959	சிலம்புத்தேன்	
1959	உணர்வின் எல்லை	
1959	செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்	
	இயலிசை நாடகம்	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

	தமிழ் நாடக வரலாறு	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
	நாடகப் பேராசிரியர் நால்வர்	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
	சிவகங்கைச் சிங்கங்கள்	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
	முதலில் முழங்கிய முரசு	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
	வீரத் தமிழகத்தில் விடுதலை வேள்வி	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
	வெள்ளையர் கண்ட வீரத் தமிழகம்	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
	விடுதலை இயக்க வரலாறு	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.

	வெள்ளை ஆதிக்க வரலாரறு	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
	போரும் வேரும்	இந்நூலின் பெயர் 1959ஆம் ஆண்டில் வெளிவந்த செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
1960	1806	
1960	கும்மந்தன் கான் சாகிபு	
	பதிற்றுப்பத்துள் மூன்றாம் பத்து	இந்நூலின் பெயர் 1960ஆம் ஆண்டில் வெளிவந்த கும்மந்தன் கான் சாகிபு நூலில் குறிக்கப்பட்டு உள்ளது.
1970	ஆராய்ச்சிக் கட்டுரைகள்	
1973	சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்	
1974	இலக்கிய இயல் அ, ஆ.	
1977	மங்கல மனைமாட்சி	
	கம்பன் – ஒரு கொம்பன்	இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில்

		இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.
	கம்பன் நம்மவன்	இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.
	வீடணன் – ஒரு திறனாய்வு	இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.
	ஆய்வியல் அரிச்சுவடி	இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.
	படிப்படியே தமிழ்ப் பண்பாடு	இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.
	கருத்துமலர்கள்	இந்நூலின் பெயர் 1977ஆம் ஆண்டில் வெளிவந்த மங்கல மனைமாட்சி நூலில் அச்சில் இருப்பதாகக் குறிக்கப்பட்டு உள்ளது.
1989	சீனம் தரும் சிந்தனைகள்	

1989	இலக்கியத் தலைவர் கலைஞர்	
1995	தமிழியல் கட்டுரைகள்	
	ந.சஞ்சீவியின் கட்டுரைக் களஞ்சியம்	
	பொதுமைசூடி	





பொறுப்புகள்

- தலைவர், இந்திய மற்றும் அயல் மொழிகளின் புலம், சென்னைப் பல்கலைக்கழகம்.
- உறுப்பினர், பல்கலைக்கழகக் கல்விக்குழு, பேரவை, சென்னைப் பல்கலைக் கழகம்.
- உறுப்பினர், முதுகலைப் பாடத் திட்டக்குழு, சென்னைப் பல்கலைக் கழகம்.
- உறுப்பினர், தமிழ்க்குழு, ஒஸ்மானியா, பெங்களூர் பல்கலைக்கழகங்கள்.
- தலைமைப் பதிப்பாசிரியர், உயராய்வு மையம், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.
- உறுப்பினர், தமிழ்பாடத்திட்டக்குழு, திருவேங்கடவன், கள்ளிக்கோட்டை, கேரளப் பல்கலைக் கழகங்கள்.
- உறுப்பினர், தேர்வுக்குழு, இந்திய உயராய்வு மையம், சிம்லா
- உறுப்பினர், மரபு வழிப் பண்பாட்டு மையச் செயலாட்சிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகம்.
- தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம் (1969).
- தலைவர், தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (1971-72).
- தலைவர், தமிழ்க் கலை மன்றம் (1971-72).

- உறுப்பினர், செயலர், தமிழகப் புலவர் குழு (1971-76).
- துணைத்தலைவர், இந்திய அகராதி சார் கழகம், திருவனந்தபுரம், (1976).
- வாழ்நாள் உறுப்பினர், திராவிட மொழியியல் கழகம், திருவனந்தபுரம்.
- வாழ்நாள் உறுப்பினர், சித்தாந்த மகா சமாஜம்.

காணொளிகள்

01] சொற்பொழிவு-புத்தூர்நடராசர்வளாகம்--சஞ்சீவி-திருமுறை சிந்தனைகள்
https://www.youtube.com/watch?v=aUqHX8397ko **[25:45]**

02] நவில்தொறும் நூல்நயம், இணைய வழி குறள் நூல்கள் அறிமுகத் தொடர், நிகழ்வு
https://www.youtube.com/watch?v=qahY_2BibDA **[1:57:47]**

03] அறக்கட்டளைச் சொற்பொழிவு – திருமிகு புலவர் பா. வீரமணி
https://www.youtube.com/watch?v=UeFC6Ve1GKo [1:27:30]

சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத்துறையின் பேராசிரியர் ந. சஞ்சீவி மணிவிழா அறக்கட்டளைச் சொற்பொழிவு – ஜனவரி 27, 2019.

(😊)(😊) ந சஞ்சீவி (😊)(😊)